# உலகமும் உமாகாந்தனும்



உமாகாந்தனிடம் நான் சிலவருடங்களின் முன்னர் கனடா "தாயகம்" பத்திரிகையில் "உலக விமர்சனம்" எனும் மகுடத்தில் வாராவாரம் எழுதமுடியுமா எனக்கேட்டபோது சில நிமிடங்கள் யோசித்துவிட்டு தனது உடன்பாட்டைத் தெரிவித்தார். புகலிடத்தில் நான் கண்ட மிகப்பெரிய புத்தகப்பூச்சி இவர் எனலாம். நிறைய வாசிப்பார். எல்லாம் வாசிப்பார். ஓர் வாசகன் என்ற வகையிலும், அரசியல் அனுபவம் கொண்டவர் என்பதாலும் தாயகத்தில் உலகவிமர்சனம் செய்வதற்குத் தோதானவர் இவர் என தாயகம் ஆசிரியர் ஜோர்ஜிடம் சொன்னபோது அவர் தனது இணக்கத்தை உடனடியாகவே தெரிவித்தார்.

உமாகாந்தன் வரவேற்பாளராக வேலைசெய்த 3 நட்சத்திர ஹோட்டலிற்கு வாராவாரம் சென்று இவரது உலக விமர்சனத்தைப் பெற்று கனடாவிற்கு பக்ஸ் பண்ணுதல் எனக்கோர் உவப்பான ஊழிய மானதாக இருந்தது. மூன்று வருடங்களாக ஓர் தீவிரமான இடதுசாரிப் பார்வையுடன் இவர் புகலிட வாசிப்பிற்குத்தந்த "உலக விமர்சனம்" காத்திரமானது.

புகலிடப் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் உலக விமர்சனம் பல விதங்களில் எழுதப்பட்டபோதும் உமாவின் எழுத்தினது தெளிவு இவருக்கென பல வாசகர்களைத் தேடிக்கொடுத்தது. உலகபந்தின் அனைத்து அரசியல் கேள்விகளையும் இவரது பேனா தொடத் தவறிய தில்லை. மிகவும் அக்கறையோடு எழுதிய பேனா இன்று எங்கள் மத்தியில் இல்லாது போய் விட்டது. தாயகத்தின் வளர்ச்சிக்கு எழுத்துப் பங்களிப்பை வளங்கிய பேனாக்களுள் உமாவின் பேனாவும் ஒன்று. இந்தப் பேனா கனதியானது, தெளிவானது. EPRLF இன் செய்தித் தொடர்பு நிறுவனமான EPIC 80 களில் தொடங்கிய "தமிழ்முரசு" மாதச் சஞ்சிகையின் ஆசிரியராக இவர் இருந்தபோது எனக்கு இவருடன் முதல் சந்திப்பு ஏற்பட்டது. அது எமது புகலிடவருகையின் தொடக்ககாலம். கணனி வசதிகளோ ரைப்றைற்றர் வசதிகளோ எம்மிடம் இருக்கவில்லை. இந்தக் காலகட்டத்தில் சஞ்சிகைள், துண்டுப்பிரசுரங்கள் யாவும் கையால் எழுதியே விநியோகம் செய்யப்பட்டன. "தமிழ் முரசி"ன் பக்கங்களில்

**க.கலாமோகன்**

அநேகமானவை இவரது கையெழுத்தைக் கொண்டுள்ளன. கையால் எழுதிக் கொடுக்கப்படும் கட்டுரைகள் கவிதைகளை இவர் தனது கையால் எழுதிப் புத்தகமாக வடிவம் அமைத்து விடுவார். இது சிரமமானதும் நேரத்தை விழுங்குவதுமான ஓர் காரியம். ஆனால் உமா இந்தக் காரியத்தை மிகவும் சிரத்தையுடனும் ஓர் அரசியல் கடமையுமாகக் கருதிச்செய்தவர். இவரதும் பல தோழர்களின் நேர்மை யான உழைப்பாலும் மாதாமாதம் பல வருடங்களாகத் தொடர்ச்சியாக வந்ததும், தேசத்தின் சேதிகளை உடனுக்குடன் அறிவதற்கான ஊடகமாவும் இருந்த "தமிழ் முரசி"ன் அனைத்து இதழ்களும் ஓர் ஆவணக் கனதி கொண்டன. அது ஓர் அரசியல் இதழாக இருந்தபோதும் இலக்கியக் கேள்விகளையும் கவனத்தில் எடுத்தது என்பதிற்குச் சாட்சியமாக இரண்டு காத்திரமான கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளது. இவைகள் வெளியீட்டின்போது உமாகாந்தன் காட்டிய அக்கறை எனது நினைவில் இன்றும் உள்ளது.

எமது புகலிட உவாதை இருப்பிலிருந்து ஓர் இருப்பை உள்வாங்கியதே உமாவின் உலகம். இவரது உலகம் ஓர் தண்ணீர் உலகமாகவும் இருந்தது. ஆம்! ஜின் உல்கம். இவரிற்குப் பிடித்தமான மதுவின் பெயர் ஜின். நான் அவரோடு ஒருபோதுமே bar இல் இருந்து குடித்ததில்லை. அவரிடம் இருந்த றெனோ 21 காரினுள் இருந்து. குடியின் மடியில் நாங்கள் போதையின் கைதிகளாக ஒருபோதும் இருந்த தில்லை. நாம் இந்தக் கணங்களில் நிறையக் கதைத்தோம். இவைகள் குடிக்கதைகளாக எனக்கு ஒருபோதுமே பட்டதில்லை. நாடு பற்றியும், நாடுகள் பற்றியும், கதைகள், கவிதைகள் பற்றியதுமான பல கேள்விகள் மீது நாங்கள் சம்பாசித்தோம், விவாதித்தோம். விவாதம் ஆக்கபூர்வமானதாக இருந்த தால்போதல் அருகில் உள்ளதென்பதே எமக்கு மறந்துவிடும். இந்தக் கணங்கள் அழிந்துவிடும் கணங்களல்ல.

ஆனால் உடல் அழியும். உடல் அழியாதிருப்பின் உலகின் ஏனைய கோலங்களை எப்படிக் காணுவதாம்? அழிவில் பிறப்பு உள்ளது, பிறப்பிலும் அழிவு. உமாகாந்தனின் இறப்பில், அவரது கடைசித் தூக்கத்தின் கடைசிக் கணங்களை வாசித்துக் கொண்டிருந்தபோது அவருள்

ஓர் இனம்புரியாத அமைதியின் நுழைவை என்னால் உணரமுடிந்தது. வாழ்வின் ரஸிப்பையும் அதன் மீதான வெறுப்பையும் காட்டியது என என்னை உணரவைத்தது அவரது கடைசிக்கோலம்.


நான் உமாகாந்தனை பிரான்ஸிலேயே முதலாவது தடவையாகக் கண்ட போதும், இவரதுமணிக் கவிதைகளை இலங்கையில் தினபதி சிந்தாமணி பத்திரிகைகளிற்குள் இருந்தபோது அறிவேன். இவர் எழுதிய மணிக்கவிதைகள் யாவும் காதல் கவிதைகளே. சிந்தாமணியின் ஆசிரியர் திரு இராஜ அரியரத்தினம் இவரது கவிதைகளை ரஸித்தார், ஊக்குவித்தார். 80களில் இவரது பெயர் "சிந்தாமணி" வாசகர்கள் பலருக்குப் பரீட்சயமானது. ஆனால் இவரது இலக்கிய உற்பத்திகள் 80 களிற்குமுன்பே தொடங்கியது என்பதை மிகவும் பிந்தியே நான் அறிய வந்தேன். ஏன்? இவர் "தான்" பற்றிப் பேசும் கலாசாரத்திற்கு அந்நியமானவராக இருந்தார் என நான் கருதுகின்றேன்.

உலக விமர்சனம் எழுதிய உமாவின் உலகம் எது?
அது எனக்குத் தெரியாது. அதனைத் தேடுதல் என் இலக்கு அல்ல. அவரது தொடர்பின் தினங்களும் கணங்களும் எனக்குள் ஓர் உலகமாக.

பாரிஸ் 03-11-2004



*1984ல் இலங்கைத் தூதுவரகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது...*



1.

பூவினுள் மறைந்து
இளவேனிலில்
பின் எழும் இலைகள்
பச்சை துளிர்கிறது

மஞ்சள், செம்மஞ்சள்
சிவப்பு. மண்ணிறம்
வண்ணங்கள்


உதிரும் இலைகள்

மரணங்களோடு மீள்கிறது
நினைவு
வண்ணங்களாய்
நீ தீட்டிய வண்ணங்களாய்

2.

காலம் மூடி விடுகிறது
எல்லாவற்றையும்
மனிதர்களை
அவர்தம் வரலாறுகளை
உண்மைகளை
எல்லாவற்றையும்
காலம் மூடிவிடுகிறது

ஆனால்
சில பேனா நுனிகள் மட்டும்
என்றுமே மூடமுடியாமல்..




**பா.அ.ஜயகரன்**

THAYAGAM

# தாயகம்

நவம்பர் 19,
2004,
கனடா



## தி.உமாகாந்தன்

1956-2004